People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org



# பத்திரிகை செய்தி

## இரோம் ஷர்மிளாவிற்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என காவல்துறைக்கு மக்கள் கண்காணிப்பகம் வேண்டுகோள்

மணிப்பூரைச் சேர்ந்த இரும்புப் பெண்மணி இரோம் ஷர்மிளாவிற்கும் பிரிட்டனைச் சேர்ந்த தேஸ்மந்த் கௌட்டின்ஹோவிற்கும் முறைப்படி திருமணம் கொடைக்கானலில் நடைபெற உள்ளது. அரசு சாரா அமைப்புகள் என்று கூறும் சிலர் இதைத் தடுக்க திட்டமிட்டு இடையூறு செய்வதை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அகிம்சை நெறிமுறைக்கு உலக முன்னோடியாக இருக்கும் இந்தியாவில் இன்றளவும் அகிம்சை உணர்வுகளுக்கு உயிரூட்டி வாழ்ந்து கொண்டிருப்பவர் இரோம் ஷர்மிளா என்றால் மிகையன்று. இவர் உலகளவில் பல்வேறு விருதுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

16 ஆண்டுகள் அவர் மேற்கொண்ட உண்ணாநிலைப் போராட்டம் உலகிலேயே மிக நீண்ட நெடிய அறப்போராட்டம் ஆகும். இப்போராட்டம் அவரது இறப்பின் முடிவுக்கானது அல்ல. நாட்டில் நீடிக்கும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்திற்கு எதிரானது ஆகும்.

கடந்த காலங்களில் கொடைக்கானல் பல்வேறு தரப்பினரின் வாழிடமாக இருந்துள்ளது. குறிப்பாக கிறித்துவ திருச்சபைகள், வெளிநாட்டினர் பிற மாநிலத்தவர், சர்வதேசப் பள்ளிகள், பள்ளி ஆசிரியர்கள், சுற்றுலாப் பயணிகள் போன்றோர் கொடைக்கானலை தாயகம் போல் கருதி வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய சுதந்திரமாக வாழும் உரிமையை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இரோம் ஷர்மிளாவிற்கும் உறுதி செய்துள்ளது.

ஆனால் இதற்கெல்லாம் முரணாக இரோம் ஷர்மிளா கொடைக்கானலை விட்டு வெளியேற வேண்டும் என்று சில அமைப்புகள் திட்டமிட்டு செய்யும் இடையூறுக்கு ஆதரவாக கொடைக்கானல் துணை கண்காணிப்பாளர் திரு.செல்வம் மற்றும் கியூ பிராஞ்ச் போலீசார் செயல்படுவது கண்டு மக்கள் கண்காணிப்பகம் அதிர்ச்சி அடைகிறது.

இதற்கு எதிராக நேர்மையுடன் சரியாகச் சிந்தனை செய்வோர். கொடைக்கானலில் உள்ள சொத்துகளின் உடைமையாளர்கள், கல்வி நிறுவனங்களின் தலைவைர்கள் மற்றும் மதச்சார்பின்மையோடு கொடைக்கானலில் வாழ்ந்து கொண்டிருக்கும் குடிமைச் சமூகமும் சாதாரண குடிமக்களும் ஒருங்கிணைந்து இரோம் ஷர்மிளாவை வலுக்கட்டாயமாக கொடைக்கானலை விட்டு வெளியேற்றும் முயற்சியை அறவழியில் தடுத்து நிறுத்த மக்கள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுக்கிறது.

மேலும் வாழ்வதற்கான உரிமை, வாழ்க்கைத் துணையை தெரிவு செய்யும் உரிமை, வசிப்பிடத்திற்கான உரிமை, சுதந்திரமாக எவ்விடத்திற்கும் பயணம் செல்வதற்கான உரிமை போன்றவற்றை இரோம் ஷர்மிளா தன் விருப்பத்திற்கேற்ப செயல்படுத்துவதை மக்கள் கண்காணிப்பகம் வெளிப்படையாக ஆதரிக்கிறது.

இரோம் ஷர்மிளா இந்த நாட்டைச் சேர்ந்தவர். இந்தியக் குடிமக்களுள் ஒருவர். இந்தியாவின் பிற பகுதிகளோடு வடகிழக்கு இந்தியாவை ஒருங்கிணைக்கும் இச்செயல் வடகிழக்கு இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு மிகச் சிறந்த முன்னுதாரணம் ஆகும்.

நம் அனைவராலும் அடிக்கடி பேசப்படும் பாலின நீதி, பெண்களுக்கான நீதி போன்றவற்றை அமைதியாக அகிம்சை வழியில் தூக்கிப்பிடிக்கும் வீராங்கனையாகவும் சமகாலத்தில் நம்மோடு வாழும் காந்தியாகத் திகழும் இரோம் ஷர்மிளாவிற்கு ஆதரவு தெரிவித்து மனித உரிமைகளை நிலைபெறச் செய்வோம்.

கொடைக்கானல் காவல்துறை இரோம் ஷர்மிளாவிற்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட்பட்டு காவல்துறை

கடமையாற்ற வேண்டும். சமூக விரோதச் சக்திகளாய்த் திகழும் சிலர் தூண்டிவிடும் சாதி மதப்பிரிவினையைக் காவல்துறை புறந்தள்ள வேண்டும். எப்போதும் அமைதிப்பூங்காவாகத் திகழும் கொடைக்கானலின் அமைதிப் பண்பாட்டை மக்கள் கண்காணிப்பகம் இங்கே இந்நேரத்தில் நினைவு கூர கடமைப்பட்டுள்ளது.

மதுரை

08.08.2017



(ஹென்றி திபேன்)

தொடர்புக்கு

எலினா திபேன் - 97175 71075

ஜெயக்குமார் - 99943 68524